# Special Issue

# International Conference on Multidimensional Approaches in Folklore Literature

(பல்நோக்குப் பார்வையில் நாட்டுப்புற இலக்கியங்கள்)

Organized by

Department of Tamil,

Padmavani Arts & Science College for Women

Salem, on 19.10.2022

in collaboration with

## International Research Journal of Tamil

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

(UGC Care Approved & MLA Indexed Journal)

# Guest Editor Message



எங்களது பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது, பெண்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பெண்கல்வியின் முன்னேற்றத்திற்காக 2005-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்படும், தேசிய தர மதிப்பீட்டில் (NAAC) A+ தரச்சான்றிதழ் பெற்று பெரியார் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் நூற்றுக்கு மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரியில் முதன்மைப் பெற்ற கல்லூரியாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தகு சிறப்பு கொண்ட எங்களது கல்லூரியில் 2010 -ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட எமது தமிழ்த்துறையில் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகளைப் பல்வேறு பொருண்மையில் நடத்தியுள்ளது. அந்த வகையில் சர்வதேசத் தமிழ் ஆய்விதழோடு இணைந்து ‘பல்நோக்குப் பார்வையில் நாட்டுப்புற இலக்கியங்கள்’ என்னும் தலைப்பில் சிறப்புற கருத்தரங்கம் நடத்தப்பட்டு ஆய்வாளர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டுரைகள் செப்பம் செய்யப்பட்டு மின்னிதழாகவும், புத்தக வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கம் நடத்துவதற்கு வாய்ப்பளித்து எங்களை ஊக்கப்படுத்திய, எமது கல்லூரியின் தாளாளர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தாளாளர் திரு.கா.சத்தியமூர்த்தி ஐயா அவர்களுக்கும், செயலாளர் திரு.கா.துரைசாமி ஐயா அவர்களுக்கும், இயக்குநர் திருமதி இசைவாணி சத்திய மூர்த்தி அம்மா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் இக்கருத்தரங்கை நடத்த ஆதரவு நல்கிய, எமது கல்லூரியின் முதல்வர் முனைவர் ரா.ஹரிகிருஷ்ணராஜ், ஐயா அவர்களுக்கும், நிர்வாக அலுவலர் முனைவர் பெ.முத்துக்குமார் ஐயா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் கல்லூரியோடு இணைந்து இக்கருத்தரங்கினை நடத்தி இவ்விதழ் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் ஆசிரியர் முனைவர் சுரேஷ் ஐயா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கம் சிறப்பாக அமைய உறுதுணையாக இருந்த எம்துறை பேராசிரியர் அனைவருக்கும், தமிழ்த்துறை மாணவ செல்வங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எங்களது அழைப்பை ஏற்று இக்கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய, பெரியார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் தி.பெரியசாமி ஐயா அவர்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறைத் தலைவர் முனைவர் இரா.காமராசு ஐயா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ‘பல்நோக்குப் பார்வையில் நாட்டுப்புற இலக்கியங்கள்’ என்னும் பரந்துபட்ட களத்தில் ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டது. அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் சீரிய முறையில் மதிப்புரை செய்யப்பட்ட கட்டுரையாளர்களுக்கு பரிந்துரை வழங்கப்பட்டது. இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ள தரமான கட்டுரைகள் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு விருந்தாக அமையும் என்பதில் எந்த விதமும் ஐயம் இல்லை. ஆய்வுக் கட்டுரைகளை உரிய நேரத்தில் உரிய நெறிமுறையில் அனுப்பி மதிப்பாய்வு செய்து திருத்தி சமர்ப்பித்த அனைத்து பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

**முனைவர் அ. பழனியம்மாள்**
(கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்)

**Dr. A. Palaniammal**
**Guest Editor cum Conference Convenor**